## காரமடை நகராட்சி

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் நாள் புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம், காரமடை நகரமன்ற கூடத்தில், நகரமன்றத் தலைவர் அவர்களால் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் நகரமன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**முன்னிலை : திருமதி.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவர்**

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

---

**பொருள் : 01**

காரமடை நகராட்சி ஆணையாளரது அக்டோபர்-2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**
பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1879/2021/இ1)

**பொருள் : 02**

காரமடை நகராட்சியில் NULM திட்டத்தில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சிக்குட்பட்ட அனைத்து சாலையோர வியாரிகளையும் பயோமெட்ரிக் முறையில் கணக்கெடுத்து புவிசார் தகவல்கள் பதிவு செய்து அவற்றிற்கு ஜியோ மேப்பிங் செய்து பயோமெட்ரிக் முறையில் அடையாள அட்டை மற்றும் சான்றிதழ் வழங்குதல். | திருவாளர்.மிரிபிகல் கேரீர்ஸ் பி லிட், கோயம்புத்தூர் | ரூ.700/- (நபர் ஒன்றுக்கு) |
| | | திருவாளர்.பாரதி எச்.ஆர்.கன்சல்டன்சி, சென்னை. | ரூ.850/- (நபர் ஒன்றுக்கு) |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்.மிரிபிகல் கேரீர்ஸ் பி லிட், கோயம்புத்தூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.மிரிபிகல் கேரீர்ஸ் பி லிட், கோயம்புத்தூர் நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(ந.எ.எண்.1583/2022/எப்1)

**<u>பொருள் : 03</u>**

கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியில் பயிற்சி மையத்திற்கு 2021-2022ம் ஆம் ஆண்டிற்கான ஆண்டு பங்கு தொகை ரூ.30000/- செலுத்த கேட்டு வரப்பெற்ற இயக்குநர், தமிழ்நாடு நகரியில் பயிற்சி மையம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.276/2021/அ2, நாள்.20.10.2022ன்படி காரமடை நகராட்சி ஆண்டு சந்தா நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியில் பயிற்சி மையத்திற்கு 2021-2022ம் ஆம் ஆண்டிற்கான ஆண்டு பங்கு தொகை ரூ.30000/- செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.
(ந.எ.எண்.2758/2022/சி1)

**<u>பொருள் : 04</u>**

காரமடை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், கடைகள் மற்றும் அலுவலகங்களுக்கு கதவு எண், தெரு பெயர், வார்டு எண், சொத்துவரி விதிப்பு எண் மற்றும் குடிநீர் இணைப்பு எண் ஆகியவற்றை குறிப்பிட்ட இம்போர்ட்டட் பிளைவுட் சீட் பலகை பொருத்தவும், பலகை ஒன்றுக்கு ரூ.50/- வீதம் (ரூபாய் ஐம்பது மட்டும்) உரிமையாளர்களிடம் பெற்றுக்கொண்டு பலகை அமைக்க அனுமதி அளிக்குமாறு திரு.D.சதாசிவம், த/பெ.P.துரைசாமி, கரன்சி, குன்னூர் என்பவரால் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பத்தின் பேரில் காரமடை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், கடைகள் மற்றும் அலுவலகங்களுக்கு கதவு எண், தெரு பெயர், வார்டு எண், சொத்துவரி விதிப்பு எண் மற்றும் குடிநீர் இணைப்பு எண் ஆகியவற்றை குறிப்பிட்ட இம்போர்ட்டட் பிளைவுட் சீட் பலகை பொருத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.2979/2022/அ1)

**<u>பொருள் : 05</u>**

பொறியியல் பணிகளில் ஒப்பந்தப்புள்ளி பெறுதல், ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளுதல், நிர்வாக அனுமதி வழங்குதல், தொழில்நுட்ப அனுமதி வழங்குல், அளவீடுகள் எடுத்தல் போன்றவற்றிற்கான அதிகார பகிர்வு மறு நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட அரசாணை நிலை எண்.158, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி.4) துறை, நாள்.02.11.2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:–**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.எ.எண்.1859/2022/இ1)

**<u>பொருள் : 06</u>**

காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11ல் உள்ள யுரேகா கார்டன் சிறுவர் பூங்காவில் சில அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் சில அத்தியாவசிய பணிகளான விளக்குகள், விளையாட்டு உபகரணங்கள் வர்ணம் பூசுதல் மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்ள ரூ.2.50 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலம்.
(ந.எ.எண்.1804/2022/இ1)

**<u>பொருள் : 07</u>**

காரமடை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.**24**ல் உள்ள காமராஜர் சாலையில் உள்ள பரிவேட்டை மைதானத்தில் உள்ள பகுதியில் நகராட்சி பொது கழிப்பிடத்தில் பக்தர்களின் வசதிக்காக நான்கு குளியல் அறைகள் கட்டுவதற்கு ரூ.**6.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலம்.
(ந.எ.எண்.1859/2022/இ1)

**<u>பொருள் : 08</u>**

காரமடை நகராட்சிக்கு உட்பட்ட அம்பேத்கர் நகர் மற்றும் எத்தப்பன் நகர் பகுதிகளில் போதிய குடிநீர் வசதி இல்லாத காரணத்தால் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனால் மேற்படி பகுதிகளில் போர்வெல் அமைத்து அப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய ரூ.**3.50** இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலம்.
(ந.எ.எண்.2770/2022/இ1)

**<u>பொருள் : 09</u>**

காரமடை நகராட்சியில் **15.11.2022**ம் தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.01 ல் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து, மின்மோட்டார் பொருத்தி குழாய் விஸ்தரிப்பு செய்யும் பணி. | **9.90** | திரு.ஆர்.எ.குப்புசாமி | 0.04 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீதவமணி என்டர்பிரைசஸ் | 3.80 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.ஆர்.எ.குப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.2577/2022/இ1)

**<u>பொருள் : 10</u>**

காரமடை நகராட்சியில் **15.11.2022**ம் தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | தலைமை நீரேற்று நிலையம், நீர் உந்து நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் குழாய் விஸ்தரிப்பு பணிகள். | 3.50 | திருவாளர்.ஆல்செம் இன்டஸ்ட்ரீஸ் | ரூ.2,92,993/- |
| | | | திருவாளர்.ஸ்ரீபவர் இன்ஜினியர்ஸ் | ரூ.2,95,051/- |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்.ஆல்செம் இன்டஸ்ட்ரீஸ், மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.எ.எண்.2578/2022/இ1)**

**<u>பொருள் : 11</u>**

காரமடை நகராட்சியில் **24.11.2022**ம் தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 முதல் 13 முடிய உள்ள தார்சாலைகளில் பேட்ச் ஒர்க் மேற்கொள்ளுதல். | 9.90 | திரு.டி.செல்வன், | 0.05 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.செ.சந்திரன், | 3.70 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.டி.செல்வன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.எ.எண்.1859/2022/இ1)**

**<u>பொருள் : 12</u>**

காரமடை நகராட்சியில் **24.11.2022**ம் தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.14 முதல் 27 முடிய உள்ள தார்சாலைகளில் பேட்ச் ஒர்க் மேற்கொள்ளுதல். | 9.90 | திரு.டி.செல்வன், | 0.05 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.செ.சந்திரன், | 3.70 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.டி.செல்வன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.எ.எண்.1859/2022/இ1)**

**<u>பொருள் : 13</u>**

காரமடை நகராட்சியில் **24.11.2022**ம் தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 வதனா கார்டன் பகுதியில் உள்ள பூங்கா இடத்தை சுற்றி கம்பிவேலி அமைத்தல். | 5.00 | திரு.டி.செல்வன், | 0.03 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.செ.சந்திரன், | 3.90 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.டி.செல்வன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.எ.எண்.2187/2022/இ1)**

**<u>பொருள் : 14</u>**

காரமடை நகராட்சியில் **10.11.2022**ம் தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சி அலுவலகத்தில் கணனி வரி வசூல் மையம் இடம் மாற்றி அமைத்தல் மற்றும் மின்சாரம் இணையதள வசதிகள் செய்யும் பணிகள். | 3.00 | திரு.டி.செல்வன், | 0.05 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.செ.சந்திரன், | 3.80 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.டி.செல்வன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.எ.எண்.2187/2022/இ1)**

**<u>பொருள் : 15</u>**

காரமடை நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.**197**, நாள்.**30.09.2022**ன்படி தெருவிளக்கு பராமரிப்பிற்கு தேவையான உபகரணங்கள் சப்ளை செய்ய ரூ.**10.00** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொது மக்கள் நலன் கருதி ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் ஏற்கனவே விநியோகம் செய்யப்பட்ட திருவாளர்.டி.எஸ்.எஸ்.நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பொது மக்கள் அவசர அவசியம் கருதி ஏற்கனவே விநியோகம் செய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.எ.எண்.2335/2022/இ1)**

**<u>பொருள் : 16</u>**

காரமடை நகராட்சி ODF + சான்று பெற பெண்களுக்கு தனியாக அமைக்கப்பட்ட பொது மற்றும் சமுதாய கழிப்பிடத்தில் அபாயக் கழிவுகள் (Sanitary Napkin and Diaper) எரியூட்டும் இயந்திரம் பொறுத்தப்பட வேண்டியுள்ளதால் 5 இடங்களில் எரியூட்டும் இயந்திரம் பொறுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எ.எண்.3200/2022/எச்1)

**<u>பொருள் : 17</u>**

காரமடை நகராட்சி ODF + சான்று பெற இணையதளத்தில் விண்ணப்பிக்கவும், அது தொடர்பாக பொது மக்கள் ஆட்சேபனை பெற நாளிதழில் அறிவிப்பு வெளியிடவும் அதற்காகவும் செலவுத்தொகை ரூ.1.00 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எ.எண்.3200/2022/எச்1)

**<u>பொருள் : 18</u>**

காரமடை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார வாகனங்களான டிராக்டர் மற்றும் டாடா ஏஸ் வண்டிகளுக்கு டயர்கள் பழுதடைந்தள்ளதால் புதிதாக டயர்கள் MRF Tyres நேரடி விற்பனையாளரான திருவாளர்.சஞ்சய் டயர்ஸ் நிறுவனத்தாரால் வழங்கப்பட்ட தொகையின்படி கொள்முதல் செய்யவும், அதற்காகவும் செலவுத் தொகை ரூ.59,770/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1) Tata Ace – TN 40 S 0073<br>Tyer No.155 D12 LT (4 Nos) | – Rs.12600/- |
| 2) Tractor – TN 40 4033<br>Big Tyer No.12428SLF Plus N121<br>and Tube 12428 SLF (2 Nos) | – Rs.38970/- |
| 3) Tractor Front Wheel<br>6.00 – 16 SLF N8 (2 Nos) | – Rs.8200/- |
| **Total** | **– Rs.59770/-** |

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எ.எண்.3204/2022/எச்1)

**<u>பொருள் : 19</u>**

காரமடை நகராட்சியில் **17.11.2022**ம் தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் இயற்கு நுண் உரக்குடில் அமைக்க இடவசதி ஏற்படுத்தும் வகையில் ஏற்கனவே கொட்டப்பட்டுள்ள திடக்கழிவுளை இட்டாச்சி (பொக்லைன்), ஜே.சி.பி மற்றும் டிப்பர் லாரி பயன்படுத்தி அகற்றுதல் அல்லது குவியல் அமைக்கும் பணி. | திருவாளர். ரூபா டிரேடர்ஸ், | 1) ஜே.சி.பி. ஒரு மணி நேரத்திற்கு -ரூ.1000/-<br>2) பொக்லைன் ஒரு மணி நேரத்திற்கு- ரூ.1950/-<br>3) டிப்பர் ஒரு லோடுக்கு - ரூ.1000/- |
| | | திருவாளர்.ஸ்ரீ ஐயப்பா பிரேக்கர்ஸ் | 1) ஜே.சி.பி. ஒரு மணி நேரத்திற்கு -ரூ.1100/-<br>2) பொக்லைன் ஒரு மணி நேரத்திற்கு- ரூ.2050/-<br>3) டிப்பர் ஒரு லோடுக்கு - ரூ.1100/- |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். ரூபா டிரேடர்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.2309/2022/எச்1)

**<u>பொருள் : 20</u>**

காரமடை நகராட்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31420/2022/SBM2, நாள்.15.11.2022ன்படி 19.11.2022 அன்று உலக கழிப்பறை தினம் சிறப்பாக கொண்டாட அனைத்து சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்களை சிறப்பான முறையில் சுத்தம் செய்து QR Code குறிப்பிட்ட அளவுகளில் வடிவமைக்கப்பட்டு பொறுத்தப்படவேண்டும் எனவும், அன்றைய தினம் பொது மக்களுக்கு கழிப்பறையை பயன்படுத்திட விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காரமடை நகராட்சியில் 13 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 2 எண்ணிக்கை பொது கழிப்பிடங்களில் பேனர் அச்சடித்து பொருத்தி உலக கழிப்பறை தினம் கொண்டாடிய வகையில் செலவினத் தொகை ரூ.43,200/- ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.3200/2022/எச்1)

**<u>பொருள் : 21</u>**

காரமடை நகராட்சியை குப்பையில்லா நகரமாக மாற்றவும் அது தொடர்பாக பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் கருத்துகேட்பு அறிவிப்பு செய்தித்தாளில் வெளியீடு செய்யவும், Swachh Survekshan-2023 பற்றிய விளம்பர தட்டிகள் நகரின் முக்கிய இடங்களில் வைத்து பொது மக்கள் சம்பந்தப்பட்ட இணைய தளத்தில் குப்பையில்லா நகரம் உறுதி செய்ய வாக்கு செலுத்தவும், பொது மக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நகர்மன்றத்தின் ஒப்புதல் பெறவும் அதற்காகும் செலவினத் தொகை ரூ.1.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எ.எண்.3200/2022/எச்1)

**பொருள் : 22**

திருமதி.வி.உஷா வெங்கடேஷ், நகர்மன்றத் தலைவர் அவர்களின் தீர்மானங்களை வாசித்தல்.

1) ஐயப்பன் கோயில் முதல் ராகவேந்திரா டிபார்ட்மெண்டல் ஸ்டோர் வரை நெடுஞ்சாலையை விரிவுபடுத்த நெடுஞ்சாலைத்துறையை கேட்டுக்கொள்வது.
2) சஞ்சாய் காந்தி நகர் பாப்பாத்தி வீடு முதல் மகேஷ் வீடு வரை வடிகால் மற்றும் தார்சாலை அமைத்தல்.

**பொருள் : 23**

திருமதி.ரா.பிரியா, 1வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) சேரன் நகர்-2 பகுதியில் உள்ள மூன்றாம் பாலம் அருகில் பழுதடைந்த சாலையை சீர்படுத்துதல்.
2) சேரன் நகர்-2 பகுதியில் ரயில்வே தண்டவாளம் அருகில் உள்ள திருமதி.பழனியம்மாள் வீட்டின் அருகில் இருந்த திரு.அருணாசலம் வீடு வரை உள்ள சாலையும், திரு.ராமகிருஷ்ணன் வீடு முதல் திருமதி.ராஜேஸ்வரி அவர்கள் வீடு வரை உள்ள சாலையையும் தார்சாலையாக அமைத்து தர வேண்டும்.
3) சேரன் நகர்-2 பகுதி முழுவதும் வீதியின் பெயர் பலகை வைத்து தரவேண்டும்.

**பொருள் : 24**

திரு.லோ.கமல்குமார், 8வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) வடமங்கலக்கரை, அம்சபுரம் பகுதியில் புதிய மின் கம்பம் அமைத்தல்.
2) அம்சபுரத்தில் உப்பு தண்ணீர் தொட்டியை மாற்றியமைத்தல்.
3) அம்சபுரத்தில் மயானத்திற்கு செல்லும் வழியில் வடிகால் கட்டுதல்.
4) வடமங்கலக்கரையில் உள்ள வடிகால் புதுப்பித்தல் மற்றும் கிணற்றுக்கு மின்மோட்டார் அமைத்தல்.
5) பானு வீட்டிற்கு மேற்கு லோகநாதன் வீடு வரை புதிய உப்பு நீர் தொட்டி அமைத்தல் (3000 லிட்டர்).
6) நாகராஜ் வீட்டிற்கு மேற்குபுரம் மணி வீடு வரை புதிய உப்பு நீர் தொட்டி அமைத்தல். (3000 லிட்டர்)
7) ஆயர்பாடியில் உள்ள சாக்கடையை புதுப்பித்தல்.
8) 8வது வார்டுக்கு தனியாக மேல்நிலைத் தொட்டி அமைத்தல்.
9) ஏ.பி.எஸ்.நகர், ஏ.கே.எஸ்.கிரீன் பார்க் ஆகிய பகுதிகளில் தார்சாலை மற்றும் புதிய சிமெண்ட் சாலையாக மாற்றியமைத்தல்.
10) அம்சபுரத்திலிருந்து ஆயர்பாடி வரையில் உள்ள ஓடையை தூர்வாருதல்.
11) அம்சபுரத்தில் உள்ள நல்ல தண்ணீர் குழாயை 2 இன்சிலிருந்து 3 இன்சாக மாற்றம் செய்தல்.
12) வடமங்கலக்கரை, அம்சபுரம், ஆயர்பாடி, ஏ.பி.எஸ்.நகர், ஏ.கே.எஸ்.நகர், பாலமாருதி நகர், அன்பு நகர், அம்மன் நகர் பகுதிகளில் புதிதாக மின்விளக்குகள் பொருத்துதல்.
13) வடமங்கலக்கரை கிழக்கு பகுதியில் உள்ள உப்பு நீர் தொட்டியை 3000 லிட்டர் தண்ணீர் தொட்டியாக மாற்றி அமைத்தல்.
14) மாருதி நகர் பகுதியில் புதிய போர்வெல் அமைத்தல்.
15) அம்சபுரம் வடக்கு பகுதியில் உள்ள மண் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றியமைத்தல்.
16) 8வது வார்டிற்கு பகுதி நேர ரேசன் கடை அமைத்தல்.

**<u>பொருள் : 25</u>**

திரு.ம.கண்ணப்பன், 14வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

**<u>டி.ஆர்.எஸ்.நகர் பகுதி - 1</u>**

1) கழிவு நீர் வடிகால்.

2) தெருவிளக்கு.

3) தார்சாலைகள்.

4) 1,00,000 ஒரு இலட்சம் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டி.

5) ரிசர்வ் சைட்டில் பூங்கா மற்றும் நடைபாதை, கால்பந்து மைதானம்.

6) சமுதாய கூடம்.

7) விநாயகர் கோயில், சிவன்கோயில்களுக்கு மின் இணைப்பு வழுங்க வேண்டும்.

8) முக்கிய வீதிகளில் சி.சி.டி.வி கேமரா பொருத்தப்படவேண்டும்.

**<u>டி.ஆர்.எஸ்.நகர் பகுதி - 2</u>**

1) மேடான பகுதியில் குடிநீர் சரியாக வராததை சரிசெய்தல்.

2) டி.ஜி.புதூரி உள்ள அனைத்து ரோடுகளுக்கும் கான்கிரீட் சாலை அமைத்து தர வேண்டும்.

3) ஸ்டேடியத்தில் இருந்து கோடதாசனூர் வரை புதிய மின் கம்பம் தெருவிளக்கு பொருத்தித்தர வேண்டும்.

4) சரஸ்வதி நகர் முதல் கோழிப்பண்ணை வரை மின் கம்பம் உள்ள பகுதிகளில் தெருவிளக்கும், மின் கம்பம் இல்லாத பகுதிகளில் மின் கம்பம் அமைத்து தர வேண்டும்.

5) டி.ஜி.புதூர் ராமர் கோயில் இருந்து கோடதாசனூர் வழியாக டி.ஆர்.எஸ்.நகர் பகுதிக்கு 3 இன்ச் குடிநீர் பைப் அமைத்து தர வேண்டும். குடிநீர் சீராக கிடைத்திட ஆவணம் செய்து தர வேண்டும்.

6) டி.ஜி.புதூர் இராஜேந்திரன் செல்வி வீட்டில் இருந்து ராமமூர்த்தி வீடு வரை வடிகால் அமைத்தல்.

7) டி.ஜி.புதூர் மயானத்திற்கு எரிமேடை அமைத்து மேற்கூரை அமைத்து ஒரு குடிநீர் குழாய் அமைத்து தரவேண்டும்.

8) கோடதாசனூர் மக்கள் பழனிசாமி வீடு முதல் வெள்ளிங்கிரி வீடு வரை வடிகால் அமைத்தல்.

9) கோடதாசனூரில் உள்ள ஆழ்குழாய் கிணறு மின் இணைப்பிற்கு பாக்ஸ் அல்லது அறை கட்டுதல்.

10) சத்யா நகர் பகுதியில் வடிகால், தெருவிளக்கு மற்றும் தார்சாலை அமைத்தல்.

**<u>பொருள் : 26</u>**

திருமதி.ஆர்.நித்யா, 15வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) மங்கலக்கரைப்புதூர் பகுதியில் உள்ள அப்துல்கலாம் பூங்காவில் பேவர் பிளாக் தளம் அமைத்தல்.

2) மங்கலக்கரைப்புதூரில் நூலகம் கட்டுதல்.

**<u>பொருள் : 27</u>**

திருமதி.வெ.மலர்கொடி, 17வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) பட்டிக்காரன்பாளையம் கிழக்கு பகுதியில் சிறு கான்கிரீட் அணை கட்டுதல்.

2) 17வது வார்டு பகுதியில் நூலகம் கட்டுதல்.

3) சாஸ்திரி நகர் பகுதியில் தற்போது உள்ள பெண்கள் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதை இடித்து புதிதாக பொது கழிப்பிடம் கட்டுதல்.

**<u>பொருள் : 28</u>**

திருமதி.எஸ்.வனிதா சஞ்சீவ் காந்தி, 27வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) சைக்கிள் கடை ராமசாமி சந்து பகுதியில் தார்சாலை அமைத்தல்.

2) அரவிந்தர் காலனி பகுதியில் தார்சாலை அமைத்தல்.

3) ஏ.ஜி.நகர் பகுதியில் தார்சாலை அமைத்தல்.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

**30.11.2022 ஆம் நாள் நடைபெற்ற நகரமன்ற  சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்**

**பொருள் எண்.01**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.02 முதல் 04 முடிய**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.05**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.06 முதல் 21 முடிய**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.22 முதல் 28 முடிய**

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
தலைவர்,
காரமடை நகர்மன்றம்